# வாசுதேவநல்லூர் எஸ்.தங்கப்பழம் பாலிடெக்னிக் கல்லூரியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நேரடி காணொளி காட்சி

வாசுதேவநல்லூர் எஸ்.தங்கப்பழம் பாலிடெக்னிக் கல்லூரியில் அரசு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் அறிவுறுத்தலின் படி சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இரண்டு நாட்களாக நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு நிறைவு விழா நேரடி காணொளி காட்சியை கல்லூரி கூட்டரங்கில் “நான் முதல்வன்” திட்டம் மூலமாக சுமார் 500க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களும் கண்டுகளித்தனர். இந்த காணொளி காட்சி மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மிகவும் பயனள்ளமாக அமைந்தது. இதில் எஸ்.தங்கப்பழம் கல்வி குழும நிறுவனர் திரு.எஸ்.தங்கப்பழம் அவர்கள், எஸ்.தங்கப்பழம் கல்வி குழுமத்தின் தாளாளர் திரு.எஸ்.டி.முருகேசன், கல்லூரி முதல்வர் சி.பாலமுருகன் அனைத்து துறைத்தலைவர்கள், ஆசிரியபெருமக்கள், ஆய்வக உதவியாளர்கள் மற்றும் அலுவக பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.